**தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 19 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும், பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,127.52 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 997.22 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 130.30 மில்லியன் அதாவது 11.55 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 512.77 | 501.69 | 11.08 | 2.16 |
| மூலதனம் | 614.75 | 495.53 | 119.22 | 19.39 |
| மொத்தம் | **1,127.52** | **997.22** | **130.30** | **11.55** |

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 29.46 | 23.82 | 18.46 | 23.32 | 110.00 | 73.60 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 7002/0000/00/0096/0015/000 ஆம் கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 7.65 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழான 05 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20.30 மில்லியன் ஆக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0110/000 | 0.37 |
| 6000/0000/00/0013/0106/000 | 4.28 |
| 6000/0000/00/0002/0153/000 | 1.08 |
| 6000/0000/00/0015/0147/000 | 0.46 |
| 6000/0000/00/0016/0098/000 | 14.11 |
| மொத்தம் | 20.30 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | கடமை தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப்) பண பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | கிடைக்கப்பெறும் காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் போன்றவற்றிற்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | ஆட்களுக்கான சம்பளப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

29201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 319,130 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் அறவிடப்படாமல் 02 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலவீச்சில் இருந்து வந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) மேற்படி 3.2(அ) பந்தியில் காண்பிக்கப்பட்ட கடன் மீதியினுள் 1997 ஆம் ஆண்டிலிருந்து சேவையை வறிதாக்கிச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 23,265 தொகை மற்றும் 2003 ஆம் ஆண்டின் போது மரணித்த உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 62,668 கடன் மீதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 திசெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் விளைவற்றோ அல்லது குறைப்பயன்பாட்டிற்குட்டோ இருந்ததாக தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | அலகு எண்ணிக்கை | விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடனும் இருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| (i) | கட்டிடங்கள் | 03 | 03 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை |
| (ii) | மோட்டார் வாகனங்கள் | 13 | 01 ஆண்டு முதல் 11 ஆண்டுகள் வரை |

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்று முறையற்ற விதத்தில் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முழுமையாக வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்களிடமிருந்த 17 காணிக்கூறுகள் முறையாக கையேற்கப்படாமல் திணைக்களத்தினால் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

**3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய சதவீதத்தினை விட குறைந்த சதவீதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசின் இல்லங்களுக்காக வாடகை அறவிட்டமையால் 2012 சனவரி மாதத்திலிருந்து 2016 யூலை மாதம் வரையான காலப்பகுதியில் 04 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடமிருந்து ரூபா 176,005 ஆன வீட்டு வாடகை குறைத்து அறவிடப்பட்டிருந்தது.

**3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

**போதியளவு செயன்முன்னேற்றமொன்று பெற்றுக்கொள்ளப்படாதிருந்த செயற்திட்டங்கள்**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத திணைக்களத்தினால் உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் ‘‘பசுக்கன்றுகளை உருவாக்கும் செயற்திட்டம்’’ என்ற பெயரில் செயற்திட்டமொன்று 2008-2015 காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்கு அக்காலப்பகுதிக்காக உள்நாட்டு நிதியங்களிலிருந்து ரூபா 512,466,200 ஆன நிதிஏற்பாடு

மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 282,701,755 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 229,764,445 அதாவது 44.83 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது, இச்செயற்திட்டத்தின் கீழ் 125,000 பசுக்கள் தேசிய பால் உற்பத்திச் செயற்பாட்டிற்கு சேர்த்துக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் இறுதியில் சேர்க்கப்பட்டிருந்த பசுக்களின் எண்ணிக்கை 54,816 ஆக இருந்தது. அவ்வாறே செயற்திட்டத்தின் மூலம் தேசிய பால் உற்பத்திக்கு சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்ட பாலின் அளவு பத்து இலட்சத்து 225 லீற்றர்களாக இருந்த போதிலும், பத்து இலட்சத்து 130.37 லீற்றர் மாத்திரம் சேர்ப்பதற்கு முடியுமாக இருந்தது. இதன் பிரகாரம் உரிய செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது,
உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**3.7 நட்டங்களும் சேதங்களும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) திணைக்களத்திற்குரிய கட்டம்பே, பேராதனை கால்நடை வளங்கள் அறிவூட்டல் கேந்திரம் அமைந்துள்ள கட்டிடத்தின் மேல் மாடியின் பகுதியொன்று 2004 யூன் 01 ஆந் திகதி முதல் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் பிராந்திய அலுவலகமொன்றை நடாத்திச் செல்வதற்காக வாடகை அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2006 திசெம்பர் 05 ஆந் திகதி முதல் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமல் மாதாந்தம் ரூபா 6,000 ஆன மதிப்பீட்டு வாடகையொன்றை கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்தது. எனினும், 2006 திசெம்பர் மாதம் முதல் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 366,000 தொகையான வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2015 திசெம்பர் மாதம் முதல் 2016 யூன் மாதம் வரையான 06 மாத காலத்திற்காகவும் எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மாதாந்தம் ரூபா 6,000 வீதப்படியான வாடகை, மத்திய மாகாண விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2012 மே 17 ஆந் திகதி முதல் ரூபா 12,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அம் மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், 2012 யூன் மாதம் முதல் 2015 நவம்பர் வரையான 42 மாதங்களுக்காக ரூபா 6,000 வீதம் வாடகை செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 252,000 ஆன நிலுவை வாடகையொன்றும் 2015 திசெம்பர் மாதம் முதல் 2016 மே மாதம் வரை 06 மாதங்களுக்காக மாதமொன்றுக்காக ரூபா 12,000 வீதம் ரூபா 72,000 ஆக ரூபா 324,000 ஆன வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இதன் பிரகாரம் 2006 திசெம்பர் மாதம் முதல் 2016 மே மாதம் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 690,000 நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நீர்ப் பாவனையாளர் இலக்கம் 6939/2 இற்குரிய கண்டி மாநகர சபையின் நீர் கைத்தொழில் பிரிவினால் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்ற பட்டியலில் அந்தந்த மாதங்களின் முடிவில் செலுத்த வேண்டிய பணத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்தப்படாமையால் 2008 யூன் 12 ஆந் திகதி முதல் 2011 திசெம்பர் 11 ஆந் திகதி வரை மிகை கட்டணமாக ரூபா 178,920 தொகை கண்டி மாநகர சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் நீர் பாவனையாளர் இலக்கம் 6939/2 மற்றும் 3990 இற்குரிய 2012 சனவரி மாதத்திலிருந்து 2015 ஆகஸ்ட் மாதம் வரையிலும் 553 ஆம் இலக்கத்திற்குரிய 2013 சனவரி மாதம் முதல் 2015 ஆகஸ்ட் மாதம் வரையிலும் நிர்ணயித்த திகதியில் நீர்ப்பட்டியல்

செலுத்தப்படாததன் காரணமாக அக்காலப்பகுதிக்காக ரூபா 125,646 மிகைக் கட்டணமொன்று மீளாய்வாண்டின் போது கண்டி மாநகர சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நீர்பட்டியலுக்காக கண்டி மாநகர சபைக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 304,566 மிகை கட்டணம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 170 | 138 | 32 |
| (ii) | மூன்றாம் நிலை | 21 | 20 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 338 | 258 | 80 |
| (iv) | ஆரம்ப நிலை | 396 | 310 | 86 |
| | மொத்தம் | 925 | 726 | 199 |